**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி** (Higher Certificate Course)
**HG10 – நிலை I – (Grade 1)**

**நேரடி எழுத்துத் தேர்வு** (Written Examination)
**நவம்பர் – டிசம்பர் 2019**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பகுதி – அ**

**I எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
Answer all questions in a word / line. **(10x1 = 10)**

1. சர்.சி.வி இராமன் எந்த துறையில் அறிஞர்?
2. பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்திக் காட்டுவது எது?
3. உயிர்மெய்க்குறில் எத்தனை மாத்திரை அளவு உடையது?
4. கலைக்கூடம் போல் காட்சி தரும் கோயில் எது?
5. முக்கனிகளுள் ஒன்று எது?
6. தமிழ்மொழி எத்தனை ஆண்டு பழமையானது?
7. விரால் மீன் என்பது எங்கு வாழும்?
8. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் வேறு பெயர் யாது?
9. தேசியகவி என்று அழைக்கப்படுபவர் யார்?
10. அந்தாதியில் இடம் பெறும் பாடல்களின் எண்ணிக்கை எத்தனை?

**பகுதி – ஆ**

**II எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
Answer any ten questions in three lines each. **(10x2=20)**

1. வள்ளலார் இறைவனை எவ்வாறு புகழ்கிறார்?
2. முடியரசனார் தமிழை எவ்வாறு மதிக்கிறார்?
3. வள்ளலார் தம்மைப் பற்றி என்ன கூறுகிறார்?
4. கல்வியில் சிறந்தவருடைய நட்பு எதைப் போன்றது என்று நாலடியார் சொல்கிறது?
5. வீரமாமுனிவர் இயற்றிய இலக்கண நூல் எது?
6. சோழன் கிள்ளியின் களிறு எங்கே கால் வைத்தது?
7. மறுமலர்ச்சிப் பாடல்களின் தன்மை என்ன?
8. எந்தெந்த அடிப்படையில் தமிழ் பழமையான சிறந்த மொழி எனலாம்?
9. 'நஞ்சு' தேர்வில் எழுதிய உணவுப் பொருட்கள் எவை?
10. வாழைக்குலை என்றால் என்ன?
11. நோபல் பரிசில் எவை எல்லாம் இடம்பெறும்?
12. கரிகாலன் புலவர்க்கு என்ன என்ன தந்தான்?
13. மெய் எழுத்துகளின் வகைகள் யாவை?

14. திரிதல் விகாரம் புணர்ச்சிக்கும் கெடுதல் விகாரம் புணர்ச்சிக்கும் சான்று தருக,
15. உவமை அணி என்றால் என்ன?

## பகுதி – இ

**III எவையேனும் <u>ஐந்து வினாக்களுக்கு</u> ஒவ்வொன்றிற்கும் <u>ஆறு வரிகளில்</u> விடை தருக.**

Answer any five questions in six sentences each. **(5x4=20)**

1. தமிழ் மொழியின் சிறப்புகளாக முடியரசன் கூறுவன யாவை?
2. காஞ்சி வரதராசப் பெருமாள் கோவில் பற்றி எழுதுக.
3. அல்லாவின் சிறப்புகளாக உமறுப்புலவர் எடுத்துரைப்பன எவை?
4. "கல்விக்கு எல்லை இல்லை" என்பதை நாலடியார் பாடல் வழி விளக்குக.
5. "தாய்மிதித்த ஆகா முடம்" – விளக்குக.
6. 'நம்பிக்கை' பாடல் வழி சிறுவனின் நம்பிக்கைப் பற்றி எழுதுக.
7. யாப்பு என்றால் என்ன? அதன் உறுப்புகள் யாவை.
8. வேற்றுமை உருபுகள் – சிறு குறிப்பு வரைக.

## பகுதி – ஈ

**IV ஏதேனும் <u>ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில்</u> விடை தருக.**

Answer any one of the following questions in fifteen sentences. **(1x10=10)**

1. கரிகாலன் தமிழ்ப் புலவர்க்குக் கட்டிக் கொடுத்த பதினாறுகால் மண்டபம் குறித்து எழுதுக.
2. நட்பைக் குறித்துத் திருக்குறள் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
3. தமிழ் எழுத்துகளின் வகைகளை விளக்கி, உதாரணத்துடன் எழுதுக.

## பகுதி – உ

**V ஏதேனும் <u>ஒன்றனுக்கு மூன்று பக்கக்</u> கட்டுரை வடிவில் விடை தருக.**

**Write an essay in three pages to any one of the questions. (1x15=15)**

1. தமிழ் உயர்தனிச் செம்மொழியாக பெருமை பெற்றதற்கான காரணங்களைத் தொகுத்து எழுதுக.
2. "காஞ்சிபுரம்" என்ற தலைப்பில் காஞ்சிபுரத்தின் சிறப்பினை விளக்கி ஒரு கட்டுரை எழுதுக.